# முதல் இடைப் பருவத் தேர்வு - 2023

## தமிழ்

வகுப்பு–7
காலம் : 1.00 மணி

பதிவு எண் :
மதிப்பெண்கள் : 30

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 6x1=6

1. 'நெறி' என்னும் சொல்லின் பொருள் ..............................
அ) வழி ஆ) குறிக்கோள் இ) கொள்கை ஈ) அறம்

2. பேச்சுமொழியை ...................... வழக்கு என்றும் கூறுவர்.
அ) இலக்கிய ஆ) உலக இ) நூல் ஈ) மொழி

3. 'கிழங்கு+எடுக்கும்' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்
அ) கிழங்கு எடுக்கும் ஆ) கிழங்கெடுக்கும் இ) கிழங்குடுக்கும் ஈ) கிழங்கொடுக்கும்

4. நாவற்பழத்திற்கு உவமையாகக் கூறப்படுவது ......................
அ) பச்சைஇலை ஆ) கோலிக்குண்டு இ) பச்சைக்காய் ஈ)செங்காய்

5. 'காட்டின் வளத்தைக் குறிக்கும் குறியீடு'–என்று அழைக்கப்படும் விலங்கு ......................
அ) சிங்கம் ஆ) மான் இ) புலி ஈ) கரடி

6. சொல்லின் முதலில் மட்டுமே இடம் பெறுவது
அ) ஐகாரக்குறுக்கம் ஆ) ஔகாரக் குறுக்கம் இ) மகரக் குறுக்கம் ஈ) ஆய்தக் குறுக்கம்

**II. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.**
**(10வது வினா கட்டாய வினா)** 5x2=10

7. காட்டுப் பூக்களுக்கு எதனை உவமையாகக் கவிஞர் சுரதா குறிப்பிடுகிறார் ?
8. மொழியின் இரு வடிவங்கள் யாவை ?
9. குற்றியலிகரம் என்றால் என்ன ?
10. 'வாய்மை' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.
11. கலைச்சொல் தருக.
அ) Media ஆ) Dialogue
12. தொகைச்சொல்லை விரித்து எழுதுக.
முத்தமிழ் – ..................................
13. எதிர்பாலுக்குரிய பெயரை எழுதுக.
மாணவன் x ........................

**II. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.** 2x3=6

14. தமிழுக்கு வளம் சேர்க்கும் இலக்கிய வகைகளாகக் கவிஞர் கூறுவன யாவை ?
15. பேச்சுமொழிக்கும் எழுத்துமொழிக்கும் இடையே உள்ள வேறுபாடுகளுள் நான்கினை எழுதுக.
16. 'காடு' பாடலில் விலங்குகளின் செயல்களாகக் கவிஞர் கூறுவனவற்றை எழுதுக.
17. புலிகள் குறித்து நீங்கள் அறிந்துகொண்ட செய்திகளைத் தொகுத்து எழுதுக.

**IV. அடிமாறாமல் எழுதுக.(முதல் பத்தி மட்டும்)** 1x3=3

18. அ) அருள்நெறி..... எனத் தொடங்கும் 'எங்கள் தமிழ்' பாடல். (அல்லது)
ஆ) பச்சை மயில் ........ எனத் தொடங்கும் 'காடு' பாடல்.

**V. விரிவான விடையளிக்கவும்.** 1x5=5

19. அ) நீங்கள் சென்று வந்த சுற்றுலா குறித்து உங்கள் நண்பனுக்குக் கடிதம் எழுதுக.
(அல்லது)
ஆ) சொலவடைகள் பொம்மலாட்டக் காட்சிகளைச் சிறுகதையாக எழுதுக.

---------



www.Padasalai.Net